# வரலாற்றில் நின்ற ஐந்தாண்டுகள்!

‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்னும் நான்..’ என்ற குரல் ஒலித்து ஐந்தாண்டுகள் நிறைவுறப் போகிறது. அவர் பதவியேற்ற நாள் என்பது கொரோனாவின் கோரத் தாண்டவம் உச்சத்தில் இருந்த காலம். எங்கும் அச்சமும் வேதனையும் சூழ்ந்திருந்தது. அ.தி.மு.க. ஆட்சி கோவிட்டைக் கையாண்ட விதம் பெரும் இழப்புகளையும் நிச்சயமின்மைகளையும் ஏற்படுத்தியிருந்தது. பத்தாண்டுகளுக்கு பின் மாபெரும் வெற்றியுடன் ஆட்சிக் கட்டிலுக்கு வந்த தி.மு.க.விற்கு கொண்டாட்டத்திற்குக்கூட நேரமில்லை. அது கொள்ளைநோயை எதிர்த்து உடனடியாகப் போராட்டக் களத்திற்கு வந்தது.

மருத்துவமனைகளில் கூடுதல் படுக்கைகளும் தேவையான மருந்துகளும் தயார் செய்யப்பட்டன. ஆக்சிஜன் பற்றாக்குறை மிகப்பெரிய பிரச்சினையாக இருந்தது. அதைப் போக்குவதற்காக போர்க்கால நடவடிக்கைகளில் முதலமைச்சர் இறங்கினார். கொரோனா பாதிக்கப்பட்டவர்களுக்கு முதல்வர் காப்பீட்டு திட்டத்தின்கீழ் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. கொரோனாவில் இறந்தோரின் குடும்பத்திற்கு இழப்பீட்டு தொகைகள் வழங்கப்பட்டன. பெற்றோரை இழந்த குழந்தைகளின் கல்விச்செலவை அரசே ஏற்றது. ஆட்சிக்கு வந்தவுடன் குடும்பங்களுக்கு கொரோனா உதவித்தொகையாக ரூ.4000 தொகையுடன் பதினான்கு வகை மளிகைப் பொருட்கள் தொகுப்பும் வழங்கப்பட்டது.

மக்கள் வீட்டைவிட்டு வெளியேற முடியாத சூழலில் தள்ளுவண்டிகள் மூலம் வீடுவீடாகச் சென்று காய்கறிகள் விற்பனை செய்யும் திட்டமும் கொண்டுவரப்பட்டது. கொரோனா காரணமாக இடைநிற்றல் ஏற்படக்கூடாது என்பதற்காக இல்லம் தேடிக் கல்வி திட்டத்தையும் அரசு செயல்படுத்தியது. தடுப்பூசிகள் பரவலாக செலுத்தப்பட்டன. தமிழ்நாட்டிற்குத் தேவையான தடுப்பூசிகளை தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசிடம் போராடிப் பெற்றது. கோவிட்டிற்கு எதிராக அரசின் பன்முக நடவடிக்கைகள் காரணமாக அடுத்த சில மாதங்களில் நோய் பரவல் கட்டுப்படுத்தப்பட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை திரும்பியதுடன் தமிழக வரலாற்றில் ஒரு புதியயுகம்பேரழிவுக்காலத்திற்குப்பின்மலரத்தொடங்கியது.

ஆட்சிக்கு வந்தவுடன் மகளிருக்கான கட்டணமில்லா பேருந்து, பால் விலைக் குறைப்பு என பல அதிரடி அறிவிப்புகளுடன் தொடங்கிய திராவிட மாடல் அரசு இந்த ஐந்தாண்டுகளில் தனது மகத்தான இலக்குகளைப் பொருளாதார வளர்ச்சி மற்றும் மக்கள் நலன் சார்ந்து எட்டியிருக்கிறது.

இந்த நாட்களை இப்போது நினைவு கூர்வதற்குக் காரணம், இந்த அரசு முதல் நாளிலிருந்தே எப்படி நெருப்பு ஆற்றில் நீந்தி தனது கடமைகளை முழுமைகெடாது காத்து வந்திருக்கிறது என்பதை உணர்ந்துகொள்ளவே. அவதூறுகளும் மறதிகளும் இந்த ஒளிபொருந்திய ஆண்டுகளின் சாதனைகளை மறைத்துவிட நாம் ஒருபோதும் அனுமதித்து விடக்கூடாது.

தி.மு.க. அரசு கொரோனா என்ற கொள்ளை நோயோடு தன் போராட்டத்தை தொடங்கியது. ஆனால் அது போராடவேண்டிய இன்னொரு பெரும் கொள்ளை நோய் ஒன்றிருந்தது. அதுதான் ஒன்றியத்தில் ஆட்சியிலிருந்த எதேச்சதிகார பாசிச வெறிகொண்ட பா.ஜ.க. அரசு. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசை எப்படியெல்லாம் துன்புறுத்தமுடியுமோ அப்படியெல்லாம் இந்த ஐந்தாண்டுகளில் தமிழ்நாடு அரசை ஒன்றிய அரசு துன்புறுத்தி வந்திருக்கிறது. இது அரசியல் எதிர்நிலையினால் மட்டுமல்ல, பா.ஜ.க.வின் அனைத்துக் கொள்கைகளுக்கும் எதிராக ஒரு எதிர்கொள்கையை தி.மு.க. கட்டமைத்து வந்திருக்கிறது என்பதுதான் முதன்மையான காரணம். இது அதிகாரங்களுக்கு இடையிலான போட்டியல்ல, இரண்டு சித்தாந்தங்களுக்கு இடையிலான போர்.

எத்தனையோ இன்னல்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் விளைவித்தபோதும் இந்த கொள்கைப்போரை சமரசமின்றி நடத்தினார் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின். ஒட்டுமொத்த இந்தியாவிலேயே மோடிக்கு சவாலாக இருப்பது அவர்மட்டுமே. பா.ஜ.க. ஆட்சிக்குஎதிராகமாநிலசுயாட்சிமற்றும்ஜனநாயகத்திற்கான போராட்டங்களைத் தமிழ்நாட்டைத் தாண்டி இந்தியா முழுக்க விரிவுபடுத்தினார்.

இந்தியா முழுக்க ஜனநாயக சக்திகளை ஒருங் கிணைத்தார். தொகுதிமறுவரைவிவகாரத்தில்தென்னிந்திய மாநிலங்கள் அடையப்போகும் பிரதிநிதித்துவ இழப்பை அவரே முதலில் சுட்டிக்காட்டிப் பெரும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார். ஜனநாயகத்திற்கும் சமூகநீதிக்குமான பாதுகாவலனாகத் தேசிய அளவில் அவரே முன்னிற்கிறார். இந்தியா கூட்டணியை உருவாக்கியதில் அவரது முதன்மையான பங்கை நாடே அறியும். அனைத்து மக்களின் நம்பிக்கைகளையும் பாதுகாத்துக் கொண்டே முதல்வரும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினும்



**மனுஷ்யபுத்திரன்**
மாநில ஆலோசகர், தி.மு.க.
தகவல் தொழில் நுட்ப அணி

சனாதனத்திற்கு எதிரான சமரசமற்ற போரைத் தொடுத்தார்கள். வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்பு சீர்திருத்தம் என்ற ஜனநாயக மோசடியிலிருந்து தமிழர்களின் வாக்குரிமையைக் காக்க தி.மு.க.வே களத்தில் முன்னின்று போராடியது.

மோடியைப் பொறுத்தவரை அரசியல் ரீதியாகவும் சித்தாந்த ரீதியாகவும் வெல்லமுடியாத ஒரே சக்தியாக தி.மு.க. மட்டும் தான் இருந்துவருகிறது. இந்த அரசைப் பலவீனப்படுத்த என்னவெல்லாமோ செய்துபார்த்து விட்டார்கள். தமிழ்நாட்டிற்கான நிதிப் பங்கீடுகளை தர மறுத்தார்கள். தமிழகத்திற்குப் புதிய திட்டங்களை தர மறுத்தார்கள். புதிய கல்விக் கொள்கை, இந்தி திணிப்பு போன்றவற்றைத் திணிப்பதற்குப் பல்வேறு மிரட்டல்களைச் செய்து பார்த்தார்கள். ஆளுநரை வைத்துக்கொண்டு மக்களால் அரசை செயல்பட விடாமல் முடக்க முயற்சித்தார்கள். அமலாக்கத்துறையின் மூலமாக இரண்டாம் நிலை தலைவர்களுக்கு நெருக்கடி ஏற்படுத்த முயற்சித்தார்கள். வாழ்நாளெல்லாம் போராட்டத்தீயில் வார்க்கப்பட்ட உறுதியான இதயத்தோடு தி.மு.க. தலைவர் அதை எதிர்த்து நின்றார்.

இத்தனைப் போராட்டங்களுக்கு நடுவேதான் இந்த அரசு இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியை எட்டி இந்தியாவின் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது. பல்வேறு துறைகளில் மனிதவளக் குறியீட்டில் முதன்மையான இடத்தை தமிழ்நாடு பெற்றுள்ளது. வறுமை ஒழிப்பில் மகத்தான சாதனைகளை செய்திருக்கிறது. பெண்கள் மற்றும் இளைஞர் நலனில் பெரும் முன்னேற்றங்கள் எட்டப்பட்டன. மகளிர் உரிமைத் தொகை, மகளிர் கட்டணமில்லா பேருந்து பயணம் மற்றும் பழைய மகளிர் சுய உதவிக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டு புதிய கடன்கள் வழங்கப்பட்டதன் மூலமாக அடித்தட்டு வர்க்க பெண்களின் சுய பொருளாதார சார்பு பெரிதும் மேம்படுத்தப்பட்டிருக்கிறது.

கல்வி வளர்ச்சியில் மிகப்பெரிய பாய்ச்சலை இந்த அரசு நிகழ்த்தியிருக்கிறது. பள்ளிக் குழந்தைகளுக்கான காலை உணவுத் திட்டம், கல்லூரி மாணவ மாணவிகளுக்கு மாதம் தலா ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப்பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டங்கள் போன்றவற்றின் மூலம் கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்ற முழக்கத்தை மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறது.

மொழி, இலக்கியம், பண்பாட்டுத் தளங்களில் மாபெரும் பங்களிப்புகளை இந்த அரசு செய்திருக்கிறது. கீழடி மற்றும் பொருநை அருங்காட்சியகங்களை நிறுவியதன் மூலம் தமிழர்களின் மிகத் தொன்மையான நாகரிகத்தை உலகத்திற்கு இந்த அரசு பறைசாற்றியிருக்கிறது. தமிழர்களின் இந்தப் பழம்பெரும் நாகரிக வரலாற்றை இந்திய தொல்லியல் துறை மூடிமறைக்க மூர்க்கத்துடன் செயல்பட்டு வந்தபோதும் தமிழர்களின் இரும்பு பயன்பாட்டின் தொன்மை உட்பட பழம்பெரும் திராவிட நாகரிகத்தின் தொன்மையான வரலாற்றினை நிறுவுவதில் இந்த அரசு பெரும்வெற்றி பெற்றிருக்கிறது.

வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க அரசு உதவியுடன் மாவட்டம்தோறும் புத்தகத் திருவிழாக்கள், தமிழ் படைப்புகளை உலக மொழிகளுக்கும் பிறமொழி படைப்புகளை தமிழுக்கும் கொண்டுவருவதற்குமான பன்னாட்டுப் புத்தக கண்காட்சி, நதிகளின் பெயரால் மண்டலவாரியாக இலக்கிய திருவிழாக்கள், மாணவர் இலக்கிய திருவிழாக்கள், சாகித்திய அகாதமி விருதிற்கு நிகராகத் தேசிய அளவிலான ’செம்மொழி இலக்கிய விருது’ உள்ளிட்ட பல உயரிய இலக்கிய விருதுகள் என தமிழகமெங்கும் அறிவார்ந்த உரையாடலுக்கான பெரும் களத்தினை உருவாக்கி இந்த அரசு ஊக்கமளித்து வந்திருக்கிறது.

மேலும் இளைஞர்களிடையே தமிழர்களின் பண்பாட்டு வரலாற்றினை எடுத்துரைக்கும் ‘மாபெரும் தமிழ்க் கனவு’ என்னும் தொடர் சொற்பொழிவு அரங்கு தமிழ்நாடெங்கும் கல்லூரிகளில் சிறந்த அறிஞர்களையும் எழுத்தாளர்களையும் கொண்டு நடத்தப்பட்டன. உயரிய விருது பெறும் எழுத்தாளர்களுக்கு வீடு வழங்கும் கனவு இல்லம் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அண்ணா நூற்றாண்டு நூலகத்தைத் தொடர்ந்து அதே போன்ற ஒரு நூலகத்தை மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகமாக இந்த அரசு உருவாக்கியதுடன் மேலும் பல மாவட்டங்களில் அத்தகைய நூலகங்கள் கட்டப்பட்டு வருகின்றன. போட்டித் தேர்வுகளுக்குப் படிக்கும் மாணவர்களுக்கு இந்த நூலகங்களும் தமிழ்நாட்டின் பிற நூலகங்களும் மிகச்சிறந்த சூழலை ஏற்படுத்தித் தந்திருக்கின்றன. இவற்றோடு இம்மாணவர்களுக்காகத் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் அறிவுசார் மையங்களையும் இந்த அரசு திறந்திருக்கிறது.

நான்முதல்வன்திட்டத்தின்மூலம்பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் பல்வேறு துறைகளில் தொழில்பயிற்சி பெற்று வேலைவாய்ப்பையும் பெற்று வருகின்றனர். தமிழ்நாடு அரசில் தொழில் கொள்கை பெருமளவு அந்நிய முதலீடுகளை ஈர்க்கக்கூடிய வகையிலும், புதிய தொழில்கள் வரும்போது அவை அதிகபட்ச வேலைவாய்ப்புகளை உருவாக்கும் விதத்திலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அடுத்த ஐந்தாண்டுகளில் தொழில் வளர்ச்சியிலும் வேலைவாய்ப்புகளிலும் பெரும் முன்னேற்றங்களை நோக்கி தமிழ்நாடு சென்று கொண்டிருக்கிறது. அதற்கேற்ற அடிப்படை கட்டமைப்புகள் பெருமளவு உருவாக்கப்பட்டிருக்கின்றன.

விளிம்பு நிலை மனிதர்கள் மற்றும் குரலற்றவர்களுக்காக இந்த அரசு பல மகத்தான பணிகளைச் செய்திருக்கிறது. அதில் முதன்மையானது ஒட்டுமொத்த இந்தியாவிற்குமே வழிகாட்டக்கூடிய வகையில் உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்குப் பிரதிநிதித்துவம் அளிப்பதாகும். இதன்மூலம் பதிமூன்றாயிரத்துக்கும் மேற்பட்ட மாற்றுத் திறனாளிகள் உள்ளாட்சி அமைப்புகளில் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளனர்.

ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர், சிறுபான்மையின மக்கள் ஆகியோருக்கான நல்வாழ்வு திட்டங்கள் பரவலாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தி.மு.க. அரசு இந்துக்கள் விரோத அரசு என்ற பொய்யை முறியடிக்கும் விதமாக அபகரிக்கப்பட்ட கோவில் நிலங்களை இந்து அறநிலையத்துறை மீட்டதுடன் ஏராளமான கோயில்கள் குடமுழுக்கு செய்யப்பட்டிருக்கிறது. இதெல்லாம் இந்து மதத்தின் பெயரால் ஆட்சி செய்யும் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில்கூட நடந்திடாத செயல்பாடுகள்.

சட்டஒழுங்கைப் பொறுத்தவரைக்கும் குற்றவாளிகள் உடனுக்குடன் கண்டுபிடிக்கப்பட்டு தண்டனையும் பெற்றுத் தரப்பட்டிருக்கிறது. எதிர்க்கட்சிகள் காட்டும் சட்ட ஒழுங்கு சீர்குலைவு என்ற பூச்சாண்டியை எவரும் நம்பத் தயாராக இல்லை.

இத்தகைய நல்லாட்சி தரும் வரலாற்று சிறப்புமிக்க அரசை வீழ்த்துவதற்காகத்தான் பா.ஜ.க.வுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் கூட்டணிய மைத்துக்கொண்டு பதவி வெறியர்களும் தமிழர் விரோத சக்திகளும் எண்ணற்ற பொய்களிலும் புனைசுருட்டுகளிலும் ஈடுபட்டி ருக்கின்றன. தமிழ்நாடு வெல்லவேண்டும் என்றால் திராவிடம் வெல்ல வேண்டும். வரும் தேர்தலில் தி.மு.க. வெல்லவேண்டும்.

வரும் தேர்தலில் தி.மு.க.வை ஆதரிப்பது என்பது மக்கள் தங்களுக்கான ஒரு அரசை ஆதரிப்பது என்று பொருள். தமிழர்களின் அரசை ஆதரிப்பது என்று பொருள். மாநில சுயாட்சிக்கும் மக்களாட்சிக்கும் ஜனநாயகத்திற்குமான ஒரு அரசை ஆதரிப்பது என்று பொருள். பாசிசத்திற்கும் மதவெறிக்கும் எதிராக மக்களாட்சித் தத்துவத்தையும் சமயம் நல்லிணக்கத்தையும் ஆதரிப்பது என்று பொருள்.

வரும் தேர்தல் அரசியல் அதிகாரத்திற்கான தேர்தல் என்பதைக் காட்டிலும் வரலாற்றின் மிகமோசமான சக்திகளுக்கு எதிரான தத்துவார்த்தப் போர். சித்தாந்தப்போர்.

**நன்றி: ‘உயிர்மை’ பிப்ரவரி 2026 இதழ்**

---

### பசுமை தொழிற்புரட்சியை உறுதிப்படுத்த

## அனைவருக்குமான வளர்ச்சியை நிலைநாட்ட எடுத்த முன்முயற்சிகள் என்ன?

### மாநிலங்களவையில் எஸ்.ஆர்.சிவலிங்கம் கேள்வி!

புதுடெல்லி, பிப். 6-

பசுமை தொழிற் புரட்சியை உறுதிப்படுத்தவும், அனைவருக்குமான வளர்ச்சியை நிலைநாட்டவும் ஒன்றிய அரசின் முன்முயற்சிகள் ஏதேனும் உள்ளதா? என மாநிலங்களவையில் திமுக மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் கேள்வி எழுப்பினார்.



திராவிட முன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் 03 ஜனவரி 2026 அன்று மாநிலங்களவையில் பசுமை தொழிற்புரட்சிய உறுதிப்படுத்தவும், அனைவருக்கு மான வளர்ச்சியை நிலைநாட்ட வும் ஒன்றிய அரிடம் ஏதேனும் முன்முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளதா? என்றும், கடந்த 2025-26ஆம் நிதியாண்டில் மொத்த உற்பத்தி பெருக்க குறியீடு உயர்ந்துள்ளது ஒன்றிய அரசின் கவனத்தில் உள்ளதா? என்றும் கிராமப்புற தேவைகள் குறைந்து வருகின்றதா? என்றும், சிறு,குறு, மற்றும் நடுத்தர தொழிற் உற்பத்தியை சமமற்ற நிலை நிலவுவது குறித்து உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்றும் ஒன்றிய அரசின் நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சௌத்ரி அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.

ஒன்றிய அரசின் நிதித் துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு:-

ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத்துறையின் அறிக்கையின்படி கடந்த 2025-26 நிதியாண்டில் நாட்டின் மொத்த உற்பத்தி பெருக்க குறியீடு 7.4 சதவீதமாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. கிராமப்புற தேவைகளை கருத்தில் கொண்டு பிரதம மந்திரி கிஷான் திட்டம்,மகாத்மா காந்தி வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம், பிரதம மந்திரி இலவச வீடுகள் திட்டம். சுய உதவி குழுக்கள் திட்டம், உற்பத்திக்கான ஊக்கத்தொகைத் திட்டம்,போன்ற பல்வேறு திட்டங்கள் ஒன்றிய அரசால் நிறை வேற்றப்பட்டு வருகின்றன என்றும், தயாரிப்பு துறைகளில் உற்பத்தியை மேம்படுத்தும் வகையில், பிரதம மந்திரி விஸ்வகர்மா திட்டம், சிறு, குறு மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளுக்கான குழு மேம்பாட்டுத் திட்டங்கள், திறன் மேம்பாட்டுத்திட்டங்கள் ஆகியவற்றின் மூலம் தயாரிப்புத் துறை, சேவைத்துறைகள், கிராமப்புற வளர்ச்சி ஆகியவற்றை மேம்படுத்த ஒன்றிய அரசு அனைத்து முயற்சி களையும் மேற்கொண்டு வருகிறது என இணையமைச்சர் தெரிவித்தார்.

மேலும், அனைத்து தரப்பினருக்கென நீடித்த வளர்ச்சியை உறுதிபடுத்தும் வகையில், தயாரிப்பு துறையில் கடன் உதவி திட்டம், உற்பத்திக்கான ஊக்கத்தொகை திட்டம், திறன் மேம்பாட்டு திட்டங்கள், வெளிநாட்டு முதலீடு ஊக்குவிப்பு திட்டம், வேலை வாய்ப்பு உறுதியளிப்பு திட்டம், சுய தொழில் முனை வோருக்கான திட்டம், புத்தாக்க திட்டங்கள் என்று பல்வேறு திட்டங்களை நகர்ப்புற மேம்பாட்டிற்கெனவும், சிறு,குறு மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளுக்கெனவும், ஒன்றிய அரசு இடைவிடாத முயற்சிகளை எடுத்து வருகிறது என்று இணையமைச்சர் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

வருகின்ற 2026-27ம் நிதியாண்டில் நாட்டின் மொத்த உற்பத்தி பெருக்க குறியீடு 6.8 சதவீதம் முதல் 7.2 சதவீதம் அளவிற்கு உயர்த்தவும், பசுமை தொழிற் புரட்சியை உறுதி படுத்தவும் அனைவருக்குமான வளர்ச்சியை நிலைநாட்டவும், ஒன்றிய அரசு அனைத்து முன் முயற்சிகளையும் எடுத்து வருகிறது என்று ஒன்றிய அரசின் நிதித்துறை இணையமைச்சர் பங்கஜ் சௌத்ரி அவர்கள் மாநிலங்களவையில் தி.மு.க. மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.



கடலூர் மேற்கு மாவட்டம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதி வடக்குத்து,வெங்கடாம்பேட்டை, மதனகோபாலபுரம் ஊராட்சிகளில் ரூ.2.33 கோடி மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணியினை சபா . இராஜேந்திரன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். சபா.பாலமுருகன், அ.குணசேகரன், ஆர்.சந்தோஷ்குமார் வீர.ராமச்சந்திரன்,இராம .வெங்கடேசன். ஜே .சடையப்பன், பாக்கியராஜ், அந்தோணி தாஸ், பிச்சையா, கோவிந்தராசு, காசிலிங்கம், ஊராட்சி செயலர் சிவக்குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

### 2026 மார்ச் மாதத்திற்குள்

## வேலூர் விமான நிலையம் செயல்படத் தொடங்கிவிடும்!

### மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதில்!

புதுடெல்லி, பிப்.6-

மார்ச், 2026க்குள் வேலூர் விமான நிலையம் பயணியர் போக்குவரத்துக்கு தயாராகி வரும் என்று வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் D.M.கதிர் ஆனந்த் மக்களவையில் எழுப்பிய கோரிக்கைக்கு சிவில் விமானப் போக்குவரத்து துறை அமைச்சர் பதிலளிக்கையில் தெரிவித்தார்.



03.12.2025 அன்று நாடாளுமன்ற மக்களவை பூஜ்ஜிய நேரத்தில் வேலூர் தொகுதி உறுப்பினர் எழுப்பிய அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயமாக உடான் திட்டத்தின் கீழ் வேலூர் விமான நிலையத்தை விரைவில் பயணியர் பயன்பாட்டுக்காக இயக்குவது தொடர்பான உரைக்கு ஒன்றிய அரசின் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் முரளிதர் மோஹோல் தனது பதில் கடிதத்தில் கூறியுள்ள விவரம் கீழ்வருமாறு:

தமிழ்நாட்டின் வேலூர் விமான நிலையம் உடான் திட்டத்தின் கீழ் 58.52 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரும் மார்ச், 2026க்குள் வேலூர் விமான நிலையம் செயல்படத் தயாராகிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தயார் நிலையில், 9 இருக்கைகள் கொண்ட விமானத்தைப் பயன்படுத்தி வேலூரை பெங்களூரு மற்றும் சென்னையுடன் இணைக்கும் RCS விமானங்களைத் தொடங்க ஏர் டாக்ஸி சேவையை தொடங்க முன்மொழிந்துள்ளது.

3. சிவில் விமான போக்குவரத்து அமைச்சகம் திட்டத்தின் முன்னேற்றத்தை உன்னிப்பாக கவனித்து வருகிறது. UDAN திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மற்றும் பிற இடங்களில் பிராந்திய விமான இணைப்பை பாதுகாப்பான மற்றும் நிலையான முறையில் மேம்படுத்துவதற்கு அமைச்சகம் உறுதியாக உள்ளது.

இவ்வாறு ஒன்றிய அரசின் சிவில் விமானப் போக்குவரத்து துறை அமைச்சர் முரளிதர் மோஹோல் தனது பதில் கடிதத்தின் வாயிலாக தெரிவித்துள்ளார்.

---

### ஒன்றிய அரசால் – திருவண்ணாமலை மாவட்டத்தில்

## பதிவு செய்யப்பட்ட அமைப்பு சாரா - தொழிலாளர்கள் எவ்வளவு பேர்?

### மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி, பிப். 6-

திருவண்ணாமலை மாவட்டத்தில் ஒன்றிய அரசால் பதிவு செய்யப்பட்ட அமைப்பு சாரா தொழிலாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்றும் அவர்களுக்கான காப்பீடு போதுமானதாக உள்ளதா என்றும் மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி உறுப்பினர் சி. என். அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.



மக்களவையில் கழக உறுப்பினர் சி.என். அண்ணாதுரை எழுப்பிய கேள்விகள் வருமாறு:-

(அ) தமிழகத்தைச் சேர்ந்த அமைப்புசாரா தொழிலாளர்களை அரசு eShram போர்ட்டலின் கீழ் பதிவு செய்துள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் தேதி வாரியாக செய்யப்பட்ட மொத்த பதிவுகளின் எண்ணிக்கை;

(ஆ) திருவண்ணாமலை மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட மற்றும் வழங்கப்பட்ட அமைப்புசாரா தொழிலாளர்களின் எண்ணிக்கை மற்றும் அதில் உள்ளடக்கப்பட்ட மொத்த அமைப்புசாரா தொழிலாளர்களின் மதிப்பிடப்பட்ட சதவீதம் மற்றும் அரசாங்கம் இந்த காப்பீட்டை போதுமானதாகக் கருதுகிறதா;

(இ) தமிழ்நாட்டின் கிராமப்புற மற்றும் கடலோரப் பகுதிகளில், குறிப்பாக அந்த மாவட்டத்தில் உள்ள புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களை குறிவைத்து, சிறப்பு விழிப்புணர்வு மற்றும் பதிவு இயக்கங்கள் அரசாங்கத்தால் நடத்தப்பட்டதா, இல்லையென்றால், அதற்கான காரணங்கள் என்ன; மற்றும்

(ஈ) நாட்டின் பின்தங்கிய மாவட்டங்களில் உலகளாவிய கவரேஜை அடைய, மொபைல் பயன்பாடுகள் மற்றும் பொது சேவை மையங்கள் மூலம் eShram சேவைகளை விரிவுபடுத்த அரசாங்கம் முன்மொழிகிறதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு இணை அமைச்சர் விரிவாகப் பதிலளித்துள்ளார்.